**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| MCOP No. 107/2023 | Date : 19.09.2025 | PW 1 |
|---|---|---|
| Name: அசோக்குமார் | த/பெ. அவினாசி | |

**1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

11.09.2023 ந்தேதி TN 33 BA 9230 என்ற வாகனத்திற்கான அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் காப்பீடும் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமமும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக மேட்டூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் C.C. 18/2024 என்ற வழக்கில் விசாரணையின் முடிவில் 2.12.2024 ந்தேதி 3ம் எதிர்மனுதாரர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 3ம் எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் எனது அப்பாவுக்கு வயது 74 என்றால் சரிதான். என் அப்பா மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பால் ஊற்றுவதற்கு ரசீது எதுவும் இல்லை. எனது அப்பாவுக்கு நான் ஒரே மகன் என்றால் சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 54 வயதாகிறது. எனது அப்பாவுக்கு வயது மூப்பின் காரணமாக கண் சரியாக தெரியாது என்றும் காது சரியாக கேட்காது என்றும் புலனாய்வு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. அனைத்து விவசாய வேலைகளும் செய்வார். விபத்து நடந்த தேதியான 11.09.2023 ந்தேதியில் எனது அப்பா விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவ பில் அறிக்கையின்படி ரூ.18, 173/-தான் அசல் பில் என்றாலும் மற்ற தொகை முனபணம் என்று சொன்னாலும் சரிதான். எனது அப்பாவுக்கு வயது அதிகமானதால் எனது தகப்பனாரின் அஜாக்ரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மாருதி வேன் பவானியில் இருந்து மேட்டூர் நோக்கி வந்தது. எனது அப்பாவும் மேற்படி திசையின் சாலையின் ஓரமாக நடந்து சென்றார். உறாரன் அடித்தும் காது கேட்காததால் எனது அப்பா சாலையின் நடுவில் வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான்

கேட்டுள்ள தொகை மிக மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

ஒம்/−அசோக்குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/− R. சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.